**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி</u>**

**முன்னிலை:– திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.**

2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 09ம் நாள்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திங்கள் கிழமை

**<u>இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை அசல் மனு எண்.17/2023</u>**

**(<u>CNR NO.TNTV14-000816-2023)</u>**

ராமு

த/பெ.சிதம்பர தேவர் . . . . . . மனுதாரர்

எதிராக

மேலாண்மை இயக்குநர் ,

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,

கும்பகோணம். . . . . . . .எதிர்மனுதாரர்

இந்த மனுவானது கடந்த 18.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டிஎன்ஏ.கணேசன், பி.எஸ்ஸி., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.உதயகுமார், பி.எஸ்ஸி., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்.....

## உத்தரவு

கடந்த 19.06.2014–ம் தேதி மதியம் சுமார் 3.30 மணியளவில் களப்பாள் வழி திருத்துறைப்பூண்டி மடப்புரம் மாதா கோவில் ஸ்டாப்பிற்கு அருகே நடந்த விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.10,00,000/– பின்வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் எதிர்மனுதாரரிடமிருந்து கிடைக்க கோரி மோட்டார் வாகன சட்டப்பிரிவுகள் 142 மற்றும் 166–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்** :–

விபத்தில் காயம்பட்ட மனுதாரரான ராமு என்பவர் 35 வயதுடையவர் என்றும், விபத்து சமயத்தில் பழ வியாபாரம் மற்றும் விவசாய வேலை செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வருமானம் ஈட்டி வந்தார் என்றும், கடந்த 19.06.2014ந்தேதி மனுதாரரும், அவரது குடும்பமும் ஆலங்குடி கோவிலுக்கு சாமி கும்பிட சென்று விட்டு ஊருக்கு வரும் போது சேலத்தில் இருந்து வேதாரண்யம் செல்லும் TN 68 N 0622 என்ற எண்ணுள்ள அரசு பேருந்தில் மன்னார்குடியில் ஏறி மடப்புரம் மாதா கோவில் ஸ்டாப்ற்கு டிக்கெட் எடுத்தார் என்றும், மதியம் 3.30 மணிக்கு மடப்புரம் மாதா கோவில் ஸ்டாப்பில் பஸ் நின்றதும் மனுதாரரின் மனைவியும், மனுதாரரின் குழந்தையும் முன்பக்கமாக இறங்கினார்கள் என்றும், மனுதாரர் பின் பக்கமாக பஸ்ஸிலிருந்து இறங்குவதற்குள் வண்டியை ஓட்டுனர் அவசரமாக எடுத்துவிட்டார் என்றும், படிகட்டில் இறங்கிக் கொண்டிருந்த மனுதாரர் நிலைதடுமாறி பேருந்துக்கு வெளியே மல்லாக்க விழுந்து விட்டார் என்றும், இதில் மனுதாரருக்கு வலது பக்க தலையிலும், வலதுபுற கை காலிலும் அடிபட்டு அசைவில்லாமல் அதே

இடத்தில் கிடந்தவரை பஸ்சில் பயணம் செய்தவர்களும், கீழே நின்றவர்களும் அவ்வழியே வந்த வேன் மூலமாக மனுதாரரின் உறவினர் பாலு துணையுடன் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை சென்று முதலுதவி சிகிச்சை செய்து பின் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்றும், பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், ஆனால் மனுதாரர் தஞ்சாவூரில் உள்ள அனு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும், 19.06.2014 முதல் 06.07.2014 வரையிலும் உள்நோயாளியாகவும், அதன் பின்னர் தொடர்ந்து வெளிநோயாளியாகவும் இருந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

ii. இந்த விபத்துக்கு முன்னர் மனுதாரர் நல்ல திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் இருந்துள்ளார் என்றும், வலது பக்க தலையில் பலத்த அடிபட்டு ஆபரேஷன் செய்யப்பட்டுள்ளதால் அடிக்கடி மயக்கம் ஏற்பட்டும் நிரந்தர ஊனம் ஏற்பட்டு முன்பு பார்த்த எந்த வேலையும் செய்ய முடியாமல் முற்றிலுமாக தொழில் பாதிக்கப்பட்டு வலது கால் சரிவர நடக்க முடியாமல் நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி விபத்து TN 68 N 0622 பேருந்தை ஓட்டிய எதிர்மனுதாரரின் போக்குவரத்துக் கழக ஓட்டுனரின் அலட்சியத்தாலும், கவனக்குறைவாலும் தான் ஏற்பட்டுள்ளது என்றும், அவர் மீது திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் குற்ற எண்.352/2014ன்கீழ் இ.த.ச. பிரிவுகள் 279, 337ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

iii) மேற்படி விபத்தினால் மனுதாரர் தலையில் பலத்த அடிபட்டு ஆப்ரேஷன் செய்துள்ளதால் மனுதாரருக்கு அடிக்கடி மயக்கம் ஏற்படுவதும், சுயநினைவை இழந்து விடுபவராகவும் இருந்து வருகின்றார் என்றும், மனுதாரரின் வருமானத்தைக் கொண்டே அவரது மனைவி, குழந்தையையும் காப்பாற்றி வந்தார் என்றும், இந்த விபத்தினால் மனுதாரர் வேலை எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டதால் மனுதாரர் மட்டும் அல்லாது அவரது குடும்பத்தினர் அனைவருமே மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

iv) மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தினால் அவரது குடும்பத்தாரும் பெருத்த மன உலைச்சலுக்கும், மன துன்பத்திற்கும் ஆளாகி உள்ளனர் என்றும், எனவே, இந்த விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட வலி, துன்பம், வருமான இழப்பு, நிரந்தர இயலாமை, மருத்துவ செலவு இன்ன பிறவற்றிற்காக ரூ.10,00,000/– மட்டுமே மனுதாரர் நஷ்ட ஈடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

v) விபத்தை ஏற்படுத்திய வாகனம் TN 68 N 0622 அரசு பேருந்தானது எதிர்மனுதாரின் கட்டுப்பாட்டில் இருந்து வருவது என்றும், மேற்படி வாகனம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக வாகனமானதால் காப்பீடு செய்யப்படவில்லை என்றும், விபத்து ஏற்பட்டபோது எதிர்மனுதாரரின் கட்டுப்பாட்டில் உள்ள ஓட்டுனர் தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும், அவருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் உள்ளது

என்றும், எதிர்மனுதாரர் பெயரிலேயே வாகனப் பதிவு |சான்றும் வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பை எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார்.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–</u>

I. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலை நிற்கக்கூடியதல்ல என்றும், அவற்றை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமும், நியாயமுமாக உள்ளது என்றும், இதனடியில் குறிப்பாக ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர பிறவற்றை மனுதாரரே சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

ii. இந்த எதிர்மனுதாரர் பேருந்தின் ஓட்டுனர் பேருந்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து விபத்தினை ஏற்படுத்தியுள்ளார் என்பது தவறாகும். மேலும் எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுனர் மீது காவல்துறை தரப்பில் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதை மட்டுமே அடிப்படையாக கொண்டு இழப்பீடு கோருவது தவறாகும் என்றும், காயமடைந்தவரின் தவறை முழுவதுமாக மறைந்து எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுனர் மீது தவறான புகார் காவல் துறையில் அளிக்கப்பட்டுள்ளது.

Iii. மேலும் 19.06.2014 மாலை 15.30 மணிக்கு ஏற்பட்ட விபத்திற்கு ஒரு நாள் முடிந்து பின் யோசனையின் பேரில் அதாவது 20.06.2014

மாலை 20.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி புகார் ஒரு நாள் காலதாமதாமாக கொடுக்கப்பட்டுள்ளதால், இது உண்மைக்கு மாறான தகவல் என்பது நிருபணமாகிறது என்றும், காவல்துறையில் தாமதமாக புகார் கொடுக்கப்படதற்கு காரண காரியங்கள் ஏதும் கூறப்படவில்லை என்றும், எனவே மேற்படி காவல்துறை புகாரில் கூறப்பட்டுள்ள விபத்து தொடர்பான தகவல்கள் முற்றிலும் ஏற்புடையது அல்ல. இந்த விபத்து குறித்து காவல் துறையில் மனுதாரர் புகார் அளிக்கவில்லை என்றும், அவருடன் பயணம் செய்ததாக கூறும் காயமடைந்தவரின் மனைவி பாக்கியம் என்பவர் காயமடைந்தவருடன் தான் பயணம் செய்தார் என்பதற்கு பயணச் சீட்டு போன்ற ஆவணங்கள் எதும் தாக்கல் செய்யவில்லை என்றும், அவர் இந்த காயமடைந்த மனுதாரரின் மனைவி என்பதால் விபத்து பற்றி உண்மை நிலவரத்தை தெரிவிக்க வாய்ப்பில்லை என்றும், விபத்து எவ்வாறு நடத்தது அதற்கு யார் பொறுப்பு என்பதை தனிப்பட்ட வேறு நபர் சாட்சியத்தின் மூலம் தான் நிரூபிக்க வேண்டும்.

iv. கடத்த 19.06.2014 அன்று இந்த எதிர்மனுதாரருக்குச் சொந்தமான டிஎன்–68என்–0622 என்ற பதிவெண் கொண்ட பேருந்தை ஓட்டுனர் அதன் தடத்தில் சீரான வேகத்திலும், சாலை விதிகளை அனுசரித்தும், நிதானமாகவும் வேதாரண்யம் நோக்கி சென்று கொண்டிருந்த போது, விபத்து நடந்ததாக கூறப்படும் மடப்புரம் பேருந்து நிறுத்தத்தில் பேருந்தை நிறுத்துவதற்கு நடத்துனர் விசில் செய்த உடன் ஓட்டுனர் பேருந்தை நிறுத்துவதற்குள், சிறிய திருப்பத்தில் மனுதாரர்

முன்படிக்கட்டு வழியாக இறங்க முற்படுவதை கவனித்த நடத்துனர், பேருந்து நிற்பதற்குள் இறங்க வேண்டாம் என கூறியும், படியிலிருந்து மேலே ஏறுங்கள் என்று கூறிக்கொண்டு பேருந்தின் பின்பகுதியிலிருந்து முன்பக்கம் வருவதற்குள், மேற்படி மனுதாரர் பேருந்திலிருந்து, குதித்து தனக்கு தானே காய விபத்தினை ஏற்படுத்திக்கொண்டுள்ளார்.

v) மேலும் எதிர்மனுதாரர் பேருந்து அரசு நிறுவனம் என்பதால் அதிக தொகை பெறவேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இந்த விபத்திற்கும், எதிர்மனுதாரர் ஓட்டுனருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், எதிர்மனுதாரர் எவ்வித நட்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்லர் என்றும், மனுதாரரே இவ்விபத்திற்கு முழுபொறுப்பாவார் என்றும், இவருடைய அவசரத்தன்மை மற்றும் மோட்டார் வாகன விதிகளுக்கு புறம்பான செயல்தான் விபத்திற்கு காரணம் என்பது தெள்ளத்தெளிவாக விளங்குகிறது என்றும், எனவே இம்மனுவினை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யவேண்டிய அவசியமும் நியாயமும் ஆகிறது.

Vi) சென்னை உயர்நீதிமன்ற கிளையில் நடைபெற்ற வழக்கு எண்.சி.எம்.ஏ.709/1983–ல் சிவக்குமார் என்ற தனியார் பேருந்து நிறுவனம் எதிர் மையின் என்கிற பழனிசாமி மற்றும் பலர் என்ற வழக்கின் தீர்ப்புரையில் 4 –ல் 1 பங்கு படியில் நின்று காயத்தினை ஏற்படுத்திக்கொண்டவருக்கு பொறுப்பு உள்ளது என சுட்டிக்காட்டி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

Vii) மனுதாரர் இவ்விபத்திற்குள்ளான பேருந்தில்தான் பயணம் செய்தார் என்பதனை பயணசீட்டின் மூலம் நீதிமன்றத்தில் நிரூபிக்க கடமைப்பட்டவராவார் என்றும், மனுதாரர் மருத்துவமனையில் எந்த தேதி முதல் எந்த தேதி வரை சிகிச்சை மேற்கொண்டதற்கும், மருந்து வாங்கியதற்கும் விபத்து பதிவேடு மற்றும் மருந்துச் சீட்டினை நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய கடமைப்பட்டவராவார் என்றும், மருத்துவ செலவிற்காக ரூ.4,00,000/–க்கு ஒட்டு மொத்த தொகை செலவு என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மருத்துவத்திற்கு செலவு செய்த ரசீதுகள் அனைத்தையும் சான்றொப்பத்துடன் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படி மருத்துவ செலவு தொகையை ஏற்க கூடாது என எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்படுகிறது.

viii. மனுதாரர் சிகிச்சை மேற்கொண்ட மருத்துவரால் வழங்கிய காயச்சான்றிதழ் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், மேலும் மனுதாரரின் இயலாமை குறித்து மனுதாரருக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொண்ட மருத்துவரால் மட்டுமே சான்றிதழ் வழங்க வேண்டும் என்றும், மனுதாரரின் வயது, தொழில், வருமானம் போன்ற விவரங்களை குடும்ப அட்டை போன்ற தக்க ஆவணங்கள் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கடமைப்பட்டவர் ஆவார்.

xi. மனுதாரர் பழ வியாபாரம் மற்றும் விவசாய வேலை செய்து அதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வருமானம் வந்ததாக மனுவில்

சொல்லியிருப்பதை தக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அதை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுதாரர் கோரரியிருக்கும் வட்டி விகிதம் வங்கி அங்கீகரிக்கும் வட்டி விகிதத்தை விட மிகவும் அதிகம் என்றும், மனுதாரர் மோட்டார் வாகன சட்டப்பிரிவு 140-ன் கீழ் இந்தியாவில் இதற்கு முன்வேறு எந்த தீர்ப்பாயத்திலும் மனு தாக்கல் செய்யப்படவில்லை என்று உறுதி அளிக்கப்பட வேண்டும் என்றும், எனவே, இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. **<u>பிரச்சனை</u>**:-

1. இந்த வழக்கு விபத்து யாருடைய அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது?

2. மனுதாரர் இழப்பீடு பெற உரிமையுள்ளவர்களா, அவ்வாறெனில் மனுதாரருக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கதக்கது?

**5.** மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் ராமு என்பவர் **ம.சா.1**ஆக விசாரிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட ஊனச்சான்றிதழ் **நீ.ம.சா.1**ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.1** ஆக துரை என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

6. **<u>பிரச்சினை எண்.1க்கு தீர்வு:–</u>**

இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய மேற்படி பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்ப்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு மனுதாரர் ராமு என்பவர் ம.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழிக்காட்டுதலின்படி மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் மனுவில் விபத்து நடந்த விதம் பற்றி மனுதாரர் குற்றவியல் வழக்கை போல சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டிய அவசியமில்லை. தன்னுடைய வழக்கின் சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலையை (Preponderance of Probabilities) நிரூபணம் செய்தாலே போதுமானதாகும்.

8. **ம.சா.1 தனது சாட்சியத்தில்**

" கடந்த 19.06.2014ந்தேதி நானும், எனது குடும்பமும் ஆலங்குடி கோவிலுக்கு சாமி கும்பிட சென்று விட்டு ஊருக்கு வரும் போது சேலத்தில் இருந்து வேதாரண்யம் செல்லும் TN 68 N 0622 என்ற எண்ணுள்ள அரசு பேருந்தில் மன்னார்குடியில் ஏறி மடப்புரம் மாதா கோவில் ஸ்டாப்ற்கு டிக்கெட் எடுத்தோம். மதியம் 3.30 மணிக்கு மடப்புரம் மாதா கோவில் ஸ்டாப்பில் பஸ் நின்றதும் எனது மனைவியும், எனது குழந்தையும் முன்பக்கமாக இறங்கினார்கள். நான் பின் பக்கமாக பஸ்ஸிலிருந்து இறங்குவதற்குள் வண்டியை ஓட்டுனர் அவசரமாக எடுத்துவிட்டார். படிகட்டில் இறங்கிக் கொண்டிருந்த நான் நிலைதடுமாறி பேருந்துக்கு வெளியே மல்லாக்க விழுந்து விட்டேன். " என சாட்சியம் அளித்துள்ளார்.

9. **ம.சா.ஆ.1**ஆன முதல் தகவல் அறிக்கையில்

" 19.06.2014ந் தேதி நானும், என் கணவர் ராமு மற்றும் குழந்தையுடன் ஆலங்குடி கோவிலுக்கு சாமி கும்பிட சென்றுவிட்டு ஊருக்கு வரும்போது சேலத்தில் இருந்து வேதாரண்யம் செல்லும் TN 68 N 0622 என்ற எண்ணுள்ள அரசு பேருந்தில் மன்னார்குடியில் ஏறி மடப்புரம் மாதா கோவில் ஸ்டாப்பிற்கு டிக்கெட் எடுத்தோம். மதியம் 3.30 மணிக்கு மடப்புரம் மாதா கோவில் ஸ்டாப்பில் பஸ் நின்றதும் நானும் என் குழந்தையும் முன்பக்கமாக இறங்கினோம். என் கணவர் பின்பக்கமாக இறங்குவதற்குள வண்டியை ஓட்டுநர் எடுத்துவிட்டார். படிகட்டில் இறங்கி கொண்டிருந்த எனது கணவர் நிலை தடுமாறி பேருந்துக்கு வெளியே மல்லாக்க விழுந்துவிட்டார். "

என கண்டு எழுதப்பட்டுள்ளதையும் இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டது.

10. மேலும் **எ.ம.சா.1**ஆன துரை என்பவர் அவருடைய சாட்சியத்தில்

" கடந்த 19.06.2014 அன்று இந்த எதிர்மனுதாரருக்குச் சொந்தமான டிஎன்-68என்-0622 என்ற பதிவெண் கொண்ட பேருந்தை ஓட்டுனராகிய நான் அதன் தடத்தில் சீரான வேகத்திலும், சாலை விதிகளை அனுசரித்தும், நிதானமாகவும் வேதாரண்யம் நோக்கி சென்று கொண்டிருந்த போது, விபத்து நடந்ததாக கூறப்படும் மடப்புரம் பேருந்து நிறுத்தத்தில் பேருந்தை நிறுத்துவதற்கு

நடத்துனர் விசில் செய்த உடன் ஓட்டுனர் பேருந்தை நிறுத்துவதற்குள், சிறிய திருப்பத்தில் மனுதாரர் முன்படிக்கட்டு வழியாக இறங்க முற்படுவதை கவனித்த நடத்துனர், பேருந்து நிற்பதற்கும் இறங்க வேண்டாம் என கூறியும், படியிலிருந்து மேலே ஏறுங்கள் என்று கூறிக்கொண்டு பேருந்தின் பின் பகுதியிலிருந்து முன்பக்கம் வருவதற்குள், மேற்படி மனுதாரர் பேருந்திலிருந்து குதித்து தனக்கு தானே காய விபத்தினை ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்பதால் எதிர்மனுதாரான நான் பணிபுரிந்து வந்த அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் மண்டலம் எந்த வகையிலும் நஷ்டாடு வழங்க கடமைப்பட்டவர் அல்லர் என்பதால் இம்மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி வேண்டும். " என சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும், ம.சா.1–ன் வாய்மொழி சாட்சியம் ம.சா.ஆ.1ஆன முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.3ஆன காயச்சான்றிதழ், ம.சா.ஆ.5ஆன டிஸ்சார்ஜ் கார்டு, ம.சா.ஆ.6ஆன விபத்து பதிவேடு, ம.சா.ஆ.8ஆன மருத்துவ குறிப்புகள், ம.சா.ஆ.9ஆன மருத்துவ செலவின பில்கள், ம.சா.ஆ.10ஆன நுண்கதிர் படங்கள், ம.சா.ஆ.11, ம.சா.ஆ.12 ஆன ஸ்கேன் ரிப்போர்ட் மற்றும் நீ.ம.சா.ஆ.1ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது இந்த வழக்கில் மனுதாரருக்கு விபத்தினால் காயங்கள் ஏற்பட்டது என்பதையும், அந்த விபத்திற்கு TN 68 N 0622 என்ற எண்ணுள்ள அரசு பேருந்தின் ஓட்டுநர் தான் (துறை என்பவர்) காரணம் எனவும், பேருந்து நிறுத்தத்தில் பேருந்தை நிறுத்துவதற்கு நடத்துனர் விசில் செய்த உடன் ஓட்டுனர் பேருந்தை நிறுத்துவதற்குள், சிறிய திருப்பத்தில் மனுதாரர்

முன்படிக்கட்டு வழியாக இறங்க முற்படுவதை கவனித்த நடத்துனர், பேருந்து நிற்பதற்கும் இறங்க வேண்டாம் என கூறியும், படியிலிருந்து மேலே ஏறுங்கள் என்று கூறிக்கொண்டு பேருந்தின் பின் பகுதியிலிருந்து முன்பக்கம் வருவதற்குள், மேற்படி மனுதாரர் பேருந்திலிருந்து குதித்து தனக்கு தானே காய விபத்தினை ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என எ.ம.சா.1 கூறும் சாட்சியத்தை நிரூபிக்கும் பொருட்டு எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆவணங்களும் முன்னிலைப்படுத்தாத நிலையில் எ.ம.சா.1 கூறும் வாதம் ஏற்புடையதல்ல என்றும், எனவே அரசு பேருந்து ஓட்டுநர் மட்டுமே விபத்திற்கு காரணம் என்ற தீர்வின் அடிப்படையில் மனுதாரருக்கு, எதிர்மனுதாரரான அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் மண்டலம் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர் ஆவார் என இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்து 1வது பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

10. **<u>பிரச்சனை எண்.2க்கு தீர்வு</u>**:-

இந்த மனுவில் மனுதாரர் ராமு என்பவர் ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சியத்திலிருந்தும், ஆவண சாட்சியத்திலிருந்தும் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை சென்று முதலுதவி சிகிச்சை செய்து பின் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்றும், பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், ஆனால் மனுதாரர் தஞ்சாவூரில் உள்ள அனு

ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும், 19.06.2014 முதல் 06.07.2014 வரையிலும் உள்நோயாளியாகவும், அதன் பின்னர் தொடர்ந்து வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார் என்பது தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் அளவை கணக்கிட மருத்துவ போர்டுக்கு அனுப்பப்பட்டார். அவரை பரிசோதித்த குழுமம் வழங்கிய அறிக்கையில் மனுதாரருக்கு 30% ஊனம் ஏற்பட்டதாக கருத்து கூறி நீ.ம.சா.ஆ.1ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கணக்கீட்டிற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின்** M.Chinnathambi Vs. S.Dheepa and another, 2020(1) TN MAC 617-ல் வழங்கியுள்ள முன் தீர்ப்பு நெறிகளை மேற்கோள்காட்டி 1 சதவீத ஊனத்திற்கு ரூ.5,000/- வீதம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதை பின்பற்றி அதன்படி ஒரு சதவீத ஊனத்திற்கு ரூ.5000/- வீதம் கணக்கிட்டு மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது 30% என்பதால் (30%x5000) அவர் 1,50,000/- இழப்பீடாக இந்த தலைப்பின் கீழ் பெற உரிமையுள்ளவர் ஆவார். மனுதாருக்கு வலி, வேதனை இருந்திருக்கும் எனவே வலி, வேதனை என்ற தலைப்பின் கீழ் அவருக்கு ரூ.20,000/-ம் வழங்கிட இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. விபத்து சமயத்தில் பழ வியாபாரம் மற்றும் விவசாய வேலை செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/- வருமானம் ஈட்டி வந்ததாக மனுவில் சொல்லப்பட்டிருந்தாலும், அதை மெய்ப்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆகையால், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய கீழ்கண்ட முன்தீர்ப்பின்படி தீர்வு காண விரும்புகிறது.

1) **Managing director,TNSTC villupuram Vs. Seetha lakshmi** dated:03.04.2017, CMA No.1132/2017, the Hon'ble Madras High court has fixed the monthly income Rs.7000/- in the year 2012, for a non mazdoor staff of PWD, following the Judgement of the Hon'ble Supreme Court in syed sadiq and others Vs. DM UIIC LTD., [CD] 2014 (SC) 044] wherein, the Honorable Supreme Court fixed the monthly income of a vegetable vendor, at Rs.6500/- in the year 2008.

2) In **Andal and others Vs Avinav Kannan and New India Assurance Co Ltd,** reported in 2019 (1) TNMAC 54, The Hon'ble Madras High Court while fixing the income for a meat chopper who had died on 07.02.2014, has taken his income Rs.6500/- in the year 2007-2008 and multiplying it with the cost of inflation index for the year 2013-2014 and then driving the result with the cost of inflation index for the year 2007-2008 (Rs.6500/-*220/129) has arrived at the income at Rs.11,085/- and has rounded off the same at Rs.11,000/- per month.

3) In **Kirti Vs Oriental Insurance Company**, the Hon'ble Supreme Court has approved the adopting of minimum wages prescribed by the Government for skilled workers, in a case where no evidence or documents were produced to show the income of the deceased.

4)In **CIVIL APPEAL NO.615OF 2021 [Arising out of S.L.P.(C) No.6466 of 2019] Chandra @ Chanda @ Chandraram & Anr. Versus Mukesh Kumar Yadav & Ors**, the Hon'ble Supreme Court has held that in the absence of salary certificate, the minimum wage notification can be a yardstick but at the same time cannot be an absolute one to fix the income of the deceased.

மேற்கண்ட முன் தீர்ப்புகளின் அடிப்படையில் இந்நீதிமன்றம் முடிவுசெய்து ஒரு விவசாயியோ, தொழிலாளியாகவோ, வேறு இதர வேலை செய்பவராக இருந்தாலும் குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி ஒரு நாளைக்கு ஊதியமாக ரூ.300 எளிதாக சம்பாதித்திருப்பார் என்றும், நாள் ஒன்றுக்கு ரூ.300/– வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.9,000/– சம்பாதித்து இருப்பார் என்று இந்நீதிமன்றம் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் மனுதாரர் மாதம் ரூ.9,000/– வருமானம் ஈட்டியிருக்க கூடும் என்று முடிவு செய்து அவர் 4 மாதம் ஓய்வில் இருந்திருக்க வாய்ப்புள்ளது என்பதால் மனுதாரருக்கு ஏற்பட்ட வருமான இழப்பீட்டிற்காக (மாத வருமானம் 9000x 4மாதம்) ரூ.36,000/–மும், ஊட்டச்சத்து உட்கொண்ட வகையில் அவருக்கு ரூ.15,000/–ம், உதவியாளர் செலவிற்காக ரூ.10,000/–ம், போக்குவரத்து செலவிற்காக ரூ.5,000/–ம், வாழ்க்கை வசதி இழப்பீட்டிற்காக ரூ.5,000/–மும், மருத்துவ பில்கள் ரூ.1,90,069/– (ம.சா.ஆ.9) என பில்கள் மொத்த தொகை என குறிப்பிடப்பட்டிருந்தாலும் ரூ.1,85,069/–த்திற்கான பில்கள் மட்டும் உள்ளதால் ரூ.1,85,069/– வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது.

**12.** மனுதாரர் ராமு என்பவருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீட்டுத் தொகை கிடைக்கதக்கதாகும்.

| | |
|---|---|
| 30% நிரந்தர ஊனத்திற்கு (30%x5000) | ரூ.1,50,000/– |
| வலி வேதனைக்கு | ரூ.20,000/– |
| வருமான இழப்பீடுக்கு (9000x4) | ரூ.36,000/– |

| | |
|---|---|
| ஊட்டச்சத்து உணவு | ரூ.15,000/- |
| உதவியாளர் செலவு | ரூ.10,000/- |
| போக்குவரத்து செலவு | ரூ.5,000/- |
| வாழ்க்கை வசதி இழப்பீடு | ரூ.5,000/- |
| மருத்துவ பில்கள் | ரூ.1,85,069/- |
| மொத்தம் | ரூ.4,26,069/- |

**13.** இந்த மனுவில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மொத்தம் ரூ.4,26,069/- சரியான தகுந்த இழப்பீடு என முடிவு செய்து அதற்கு மனு தேதியிலிருந்து தொகை வசூலாகும் வரை தவறுகையினால் தள்ளுபடியாக காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக மீதி காலத்திற்கு 7.5% வட்டியுடன் சேர்த்து வழங்கி உத்தரவிட முடிவு செய்யப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையானது நியாயமான தகுந்த இழப்பீட்டுத் தொகை எனவும் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரருக்கான மேற்படி இழப்பீட்டு தொகையினை அவருக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் The Divisional Manager, The Oriental Insurance Company Ltd., Kannur Vs. Rajesh & Others என்ற வழக்கில் 2016(1) TN MAC 433-ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பில் கண்ட வழிமுறைகளின்படி செலுத்த உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறாக பிரச்சனை எண்.3க்கு தீர்வு காணப்படுகிறது.

**14.** இறுதியாக, மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டும், ரூ.4,26,069/-ஐ எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடாக மனு தாக்கல் நாள் (30.03.2015) முதல் தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாதத்திற்குள், எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கில் (தவறுகையினால் தள்ளுபடியான காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக) வழங்க வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டு தொகையை எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற திருத்துறைப்பூண்டி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கணக்கு எண்.000000 42903368477 (IFSC Code SBIN0000936) கணக்கில் பணத்தை வைப்பீடு செய்ய வேண்டும். மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை மனுதாரர் தன்னுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி வங்கியின் NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மனுதாரரின் காயத்தின் தன்மையை கருத்தில் கொண்டும், விபத்தானது 2014-ல் ஏற்பட்டுள்ள காரணத்தினாலும் இழப்பீட்டு தொகை முழுவதையும் மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய மனுதாரர் செலுத்த வேண்டிய பற்றாக்குறை நீதிமன்ற கட்டணமாக ரூ.3260.69/- (முழுமையாக்கப்பட்ட தொகை ரூ.3,261/-) உத்தரவு தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் ரூ.11260.69/- (முழுமையாக்கப்பட்ட தொகை ரூ.11,261/-) என

நிர்ணயம் செய்யப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சோழ மண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272** என்ற வழக்கில் பிறப்பித்துள்ள உத்தரவின்படி இத்தீர்ப்பாயம் தீர்ப்பாணை எதுவும் வனைய வேண்டியதில்லை என தீர்மானிக்கின்றது.

என்னால் சுருக்கெழுத்தரிடம் வாய்மொழியாக சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்படடு பின் என்னால் சரிப்பார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.27 19:05:41 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.

**<u>செலவுத் தொகை பட்டியல்</u>**

| மனுதாரர் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 3633 | 50 |
| வக்காலத்து கட்டணம் | 10 | 00 |
| நீதிமன்ற ஆவண கட்டணம் | 25 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 11261 | 00 |
| சம்மன்படி | 4 | 50 |
| தட்டச்சு கூலி | 100 | 00 |
| மொத்தம் | 15034 | 00 |

(இம்மனுவின் செலவுத் தொகையான **ரூ.15,034/-ஐ** எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

1. **<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>:-**

ம.சா.1 ராமு (மனுதாரர்)

2. **<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:-**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 20.06.2014 | முதல் தகவல் அறிக்கை - உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 17.10.2013 | வாகன பதிவு சான்று - உண்மை நகல் |
| ம.சா.ஆ.3 | 19.06.2014 | காயச்சான்று - உண்மை நகல் |
| ம.சா.ஆ.4 | 23.06.2014 | TN 68 N 0622 என்ற வாகனத்தின் வாகன ஆய்வறிக்கை -உண்மை நகல் |
| ம.சா.ஆ.5 | 06.07.2014 | டிஸ்சார்ஜ் கார்டு - அசல் |
| ம.சா.ஆ.6 | -- | விபத்து பதிவேடு- உண்மை நகல் |
| ம.சா.ஆ.7 | -- | எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் - உண்மை நகல் |
| ம.சா.ஆ.8 | -- | மருத்துவ குறிப்புகள் - அசல் |
| ம.சா.ஆ.9 | -- | மருத்துவ செலவின பில்கள் (எண்ணிக்கை -90) அசல் |
| ம.சா.ஆ.10 | -- | நுண்கதிர் படங்கள் -அசல் |
| ம.சா.ஆ.11 | 20.06.2014 | ஸ்கேன் ரிப்போர்ட் |
| ம.சா.ஆ.12 | 28.06.2014 | ஸ்கேன் ரிப்போர்ட் |

3. **<u>நீதிமன்ற சான்றாவணம்</u>**:–

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 10.11.2025 | திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் |

4. **<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :–</u>**

எ.ம.சா.1 துரை (அரசு பேருந்து ஓட்டுநர்)

5. **<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :– இல்லை</u>**

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.27 19:05:49 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.